DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.219/2025

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சுதா |
| Father's / Husband Name | : | மாரிமுத்து |
| Village | : | கம்பம் |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2026.

புகார்தாரர் ஆஜர்.

முதல் விசாரணை:

1. புகார்தாரரை எனக்கு தெரியும். நான் காய்கறி வியாபாரம் செய்கிறேன். எனக்கு பணம் பற்றாக்குறை ஏற்பட்டது. மார்ச் மாதம், 2023 ல் ராம்குமாரிடம் ரூ.1 லட்சம் கந்து வட்டிக்கு வாங்கினேன். அதற்கு ஆதரவாக கையொப்பமிட்ட காசோலையை புகார்தாரரிடம் கொடுத்திருந்தேன். தினமும் ரூ.1000 ராம்குமார் அல்லது அவரது மனைவி அஞ்சனா என்பவருக்கு கையிலும், ரொக்கமாகவும் கொடுப்பேன். நான் வாங்கிய கடனை முடித்துவிட்டு, 2024, ஆகஸ்ட் மாதத்தில் ரூ.1 லட்சம் புகார்தாரரிடம் வாங்கினேன். 3 மாதத்தில் மேற்படி பணத்தை திருப்பிகொடுத்துவிட்டேன். நான் பணத்தை கொடுத்துவிட்டு காசோலையை கேட்டபோது வட்டி அதிகமாக கேட்டார். எனது மகளுக்கு குழந்தை பிறந்ததால் நான் ஊருக்கு சென்றுவிட்டேன். அதனால் புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்தவிபரம் எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டாம் என்று கூறி புகார்தாரரின் கையில் கொடுத்திருந்தேன்.

2. அதற்கு என்னிடம் வீடியோ பதிவு உள்ளது. அதன்பின்பு போலீசார் வீட்டிற்கு வந்தபோதுதான் காசோலை வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரிய வந்தது. ராம்குமாருக்கும், அவரது மனைவி அஞ்சனா என்பவருக்கும் நான் Gpay மூலம் பணம் செலுத்தியதற்கான வங்கி பரிவர்த்தணையை தாக்கல் செய்கிறேன். **மேற்படி 01.01.2023 முதல் 31.12.2024 க்கான வங்கி பரிவர்த்தணைக்குரிய ஆவணம் எ.சா.ஆ.1 ஆகும்.**

(கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகறிது.)

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.09 15:24:29 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam